தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 09.09.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காரீஃப் பருவ தீவனப்பயிர் தினம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தீவனப்பயிர் துறையில் 09.09.2022 அன்று காரீஃப் பருவ தீவனப்பயிர் தின விழா நடத்தப்பட்டது. பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம் இயக்குநர் முனைவர். இரா. இரவிகேசவன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த விவசாய பெருமக்களை வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர். மு. க. கலாராணி அவர்கள், பியர் பாதுகாப்பு இயக்குநர் முனைவர். மூ. சாந்தி அவர்கள் மற்றும் முனைவர். இர. பெருமாள்சாமி, மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை ஆகியோர் வாழ்த்துரை நல்கினர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் விழாவை துவக்கி வைத்து கால்நடை பராமரிப்பில் பசுந்தீவனத்தின் முக்கிய துவத்தையும் அதனைச் சார்ந்த விசாயிகளின் வாழ்வாதாரத்தை பற்றியும் தொடக்க உரையாற்றினார். மேலும் தன்னுடைய உரையில் தமிழ் நாட்டின் பால் உற்பத்திறனை பற்றி விளக்கினார். தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 5360 லட்சமாக உள்ளது. பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 206 லட்சம் லிட்டர் ஆகும்.

இதில் சுமார் **90** விழுக்காடு சிறு, குறு மற்றும் நிலமற்ற விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போதைய பால் உற்பத்தி திறன் நான்கு விழுக்காடு ஆகும். இதனை கறவை மாடுகளுக்கு சத்தான மற்றும் சமச்சீரான தீவனப் பயிர்களை அளிப்பதன் மூலம் ஏழு விழுக்காடாக உயர்த்த முடியும். இந்த பயிற்சியானது இவ்விலக்கினை அடைய வழிவகை செய்யும்.

இந்நிகழ்ச்சியில் அறுபதுக்கும் மேற்பட்ட கால்நடை விவசாயிகள், ஆவின், ஹட்சன், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று பயனடைந்தனர். முனைவர். கா. ந. கணேசன், பேராசிரியர் மற்றும் தலைவர், தீவனப்பயிர் துறை அவர்கள் தொழில் நுட்ப பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியுரையாற்றினார். இப்பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை தீவனப்பயிர் துறை விஞ்ஞானிகள் திறம்பட ஏற்பாடு செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்